பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 28 ஞாயிற்றுக்கிழமை (12-01-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 47

# தொண்டா யோசனைக்கு எதிராக
# தென்பகுதியில் பெரும் பிரசார யுத்தம்!

## சிங்கள பாதுகாப்பு அமைப்பு முழு மூச்சில் செயற்பட முஸ்தீபு

கொழும்பு, ஜனவரி 12

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அமைச்சர் தொண்டமான் சமர்ப்பித்திருக்கும் யோசனைகளுக்கு எதிராக தெற்கில் பெரும் பிரசார யுத்தம் ஒன்றை முழு மூச்சுடன் நடத்துவதற்கு சிங்கள தேச பாதுகாவலர் அமைப்பு முடிவு செய்திருக்கிறது.

முன்னாள் அமைச்சர் காமினி ஜெயசூரியாவின் தலைமையின் கீழ் இயங்கும் சிங்கள தேச பாதுகாவலர் இயக்கம் பிரசார யுத்தத்திற்காக பல்வேறு சிங்கள பேரினவாத அமைப்புகளை கூட்டுச் சேர்த்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொண்டாவின் யோசனைக்கு எதிராக தெற்கில் தொடர் கூட்டங்களை நடத்தவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்தக் கூட்டத் தொடரில் முதலாவது கூட்டம் இன்று

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமுக்கு 75 யார் தூரத்தில் வைத்து தேச விரோத கும்பல் ஒன்றின் மீது தாங்கள் தாக்குதல் நடத்தியதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற இந்தத் தாக்குதலில் தேசவிரோதி ஒருவர் பலியானதாகவும், மற்றும் ஒருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கொழும்பில் வசிக்கும் ஏழு வர்த்தகர்கள் கைது!
### புலிகளுக்கு நிதி அளித்தனராம்!

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு நிதி உதவி வழங்கினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கொழும்பு மாநகரில் ஏழு வர்த்தகர்கள் புலனாய்வுப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் இருந்தபடி விடுதலைப் புலிகளுக்கு உதவி வழங்கிவருவதாகக் கூறப்படுபவர்கள் பற்றி புலனாய்வுத் துறையினருக்குக் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்தே இந்த எழுவரும் கைது செய்யப்பட்டனர் என்று கொழும்பில் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## அங்காடி வியாபாரிகள் அப்புறப்படுத்தப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ். நகரப் பகுதியில் வீதியோரங்களில் வியாபாரம் செய்த அங்காடி வியாபாரிகள் நேற்று அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்.

போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்க்கவும்—

நகரைச் சுத்தமாக வைத்திருக்க வசதியாகவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையுடன் இணைந்து தமிழீழ காவல் துறையினர் இந்தப் பணியில் நேற்று ஈடுபட்டனர்.

அங்காடி வியாபாரிகளுக்கு யாழ் மரக்கறி சந்தைக்கு அருகில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. (உ-3)

## மண்எண்ணெய் விலை தொடர்ந்து வீழ்ச்சி!

யாழ்ப்பாணம், ஜன. 12

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பங்கீட்டு அடிப்படையில் விற்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட விலையில்—லீற்றர் 38 ரூபாவுக்கு — நேற்று மண்எண்ணெய் வெளிச்சந்தையில் தாராளமாக விற்கப்பட்டது.

லொறிகளில் நேற்றும் மண்எண்ணெய் கொண்டுவரப்பட்டதால் இன்று விலையில் மேலும் வீழ்ச்சி ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேசமயம் சன்லைட் சவர்க்காரம் ஒன்றின் விலை நேற்று 10 ரூபாவாகவும், 550 கிறாம் றின்சோ பைக்கெற் ஒன்றின் விலை 45 ரூபாவாகவும் இருந்தது

சர்க்கரையின் விலையும் நேற்று வீழ்ச்சி அடைந்திருந்தது. கடத்த வாரம் கிலோ 70 ரூபாவாக விற்கப்பட்ட சர்க்கரை நேற்று 45 ரூபா முதல் 50 ரூபா வரை விற்கப்பட்டது. [இ-3]

## அனுரா பண்டாரநாயக்கா கட்சியிலிருந்து நீக்கம்?

கொழும்பு, ஜன. 12

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவுடன் தொடர்பு கொள்ளாமல் திரு. அனுரா பண்டாரநாயக்கா தன்னிச்சையாகவே கட்சி வேலைகளில் தான்தோன்றித்தனமாக ஈடுபட்டு வருவதனால் அவர் கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவாரா என்ற கேள்வி கட்சி வட்டாரங்களில் எழுந்துள்ளதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மத்திய குழுவின் ஆலோசனையை பெறாமலேயே கட்சிக் கூட்டாளர்களைக் கூட்டுவதிலும், கட்சி அலுவல்களைப் பார்ப்பதிலும் அவர் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மகியங்கனை வர்த்தகரும் சுதந்திரக் கட்சிப் பிரமுகருமான சிட்னி பிரேமரட்ன கமகேயின் கொலை தொடர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இன்று பல்வேறு இடங்களில் மீட்புநிதி பெற ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 12

இதுவரை மீட்புநிதி செலுத்தாதோரின் வசதி கருதி இன்று ஞாயிற்றுக்கிழமை குடாநாட்டில் பத்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் மூன்று வட்டவைப் பிரதேசங்களிலும் தமிழீழ மீட்பு நிதி திரட்டப்பட உள்ளது. இப்பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் மீட்பு நிதியைச் செலுத்துவதற்காக ஐந்து பாடசாலைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பின்வரும் பாடசாலைகளில் பின்வரும் நேரங்களில் மீட்பு

(4ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



தென்னிந்தியாவிலை நிலநடுக்கம்...... தென்னிலங்கையிலை இனநடுக்கம் ...!

## கைக்குண்டு வெடித்ததில் மாணவர் இருவர் மரணம்!

மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டிப் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் கிடந்த குண்டு ஒன்று வெடித்ததில் பாடசாலை மாணவர்கள் இருவர் கொல்லப்பட்டனர்.

ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிகத் தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை. [உ-10]

## தென்னிந்திய மாநிலங்களில் நேற்று நிலநடுக்கம்!

சென்னை, ஜன. 12

தென் இந்திய மாநிலங்களில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

வங்காள விரிகுடாவில் மையம் கொண்டிருந்த அந்த நிலநடுக்கம் றிச்டர் அளவில் 5.2 சக்தி கொண்டதாக இருந்தது என்றும் அறிவிக்கப்படுகிறது.

சென்னை நகரிலும் நிலநடுக்கத்தின் தாக்கம் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## 2 வேங்கைகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜன. 12

மட்டக்களப்பு மாவட்டம் காக்காச்சிவெட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் விடுதலைப்புலிகள் போராளிகள் மீது பதுங்கியிருந்த படையினர் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

2 ஆம் லெப்டினன்ட் தீபன் [வைத்தி [illegible]] மட்ட[illegible] வீரவேங்கை [illegible] சுபராஜ் [அழகப்பு தயானந்தலிங்கம் -காக்காச்சிவெட்டை] ஆகியோரே வீரமரணமடைந்தவர்களாவர்.

இதேவேளை — நேற்று முன்தினம் மாலை 6 மணிக்குத் தவறுதலாக இடம்பெற்ற வெடி விபத்தில் விடுதலைப் புலிகள் ஆதரவாளரான ராஜன் [முனைக்காடு] மரண[illegible] தெரிவிக்கப்பட்[illegible] [உ-3-10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகதிகளை திருப்பியனுப்பும் நடவடிக்கைக்கு கண்டனம்

லண்டன், ஜன. 12

தமிழ் நாட்டில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் முயற்சியை சர்வதேச அகதிகள் நிறுவனங்கள் பலவும் கண்டித்துள்ளன; கவலையும் தெரிவித்துள்ளன.

இலங்கையின் வடக்கு—கிழக்கு பகுதிகளில் இன்னமும் உள்நாட்டுப் போர் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. எனவே அகதிகளை அங்கு திருப்பி அனுப்பினால் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு கிடைக்காது என்று அந்த நிறுவனங்கள் பலவும் சுட்டிக் காட்டியுள்ளன.

இலங்கை திரும்ப சம்மதம் தெரிவிக்கும் படிவங்களில் கையொப்பமிட்ட அகதிகள் பலருக்கு அது பற்றி அப்போது எதுவுமே தெரிந்திருக்கவில்லை.

திரும்பிச் செல்ல சம்மதம் தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளோரின் எண்

[3 ஆம் பக்கம் பார்க்க]

# பதுளையில் அதிரடி தாக்கு!
# 10 லட்சம் ரூபா கொள்ளை!!
## சுப்ரிண்டன், கான்ஸ்டபிள் சூட்டுக்குப் பலி!!!

கொழும்பு, ஜன. 12

பதுளை மாவட்டம் தேவத்தை என்ற இடத்தில் நேற்று முன்தினம் தேயிலைத் தோட்டத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட பத்து லட்சம் ரூபா, இனந்தெரியாத கோஷ்டி ஒன்றினால் துப்பாக்கித் தாக்குதல் நடத்தி கொள்ளையடிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலின் போது பணத்தை எடுத்து வந்த தோட்ட சுப்ரிண்டனும், பாதுகாப்பாக வந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் உயிரிழந்தனர்.

வாகனம் ஒன்றில் சம்பளப் பணம் எடுத்துச் செல்லப்பட்ட போது பதுங்கியிருந்தகோஷ்டி ஒன்று அதிரடித் தாக்குதல் நடத்தி பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றது.

உள்ளூர்வாசிகள் சிலரின் உதவியுடன் விடுதலைப் புலிகளே இந்தக் கொள்ளையை நடத்தியிருக்க வேண்டும் என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன. [உ-இ-10-3]

## கொள்ளைச் சம்பவம் புலிகளின் கைவரிசையாம்!

லண்டன், ஜன. 12

விடுதலைப் புலிகளின் கைவரிசை மலையகப் பகுதி வரை பரவியிருப்பதையே பதுளை கொள்ளைச் சம்பவம் காட்டுகிறது.

— ஸ்ரீலங்கா பாதுகாப்பு அதிகாரிகள் இவ்வாறு தெரிவித்ததாக பி. பி. ஸி. நேற்றிரவு செய்தி வெளியிட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் வேண்டுமென்றே புலிகளை அதிகாரிகள் சம்பந்தப்படுத்துவதாக பேச்சடிபடுகின்றது என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது.

அண்மைக் காலமாக மலையகத்தில் புலிகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகவும்—

மிகக் குறுகிய காலத்தில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் மலையகத்தில் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது. [உ-3]

## எந்த முகத்துடன் தொண்டா புலிகளுடன் பேசச்செல்வார்?
### சிங்கள, முஸ்லிம் பிரமுகர்கள் கேள்வி

"தொண்டமான் மலையகத் தமிழரின் தலைவர். அவரையும் மீறி மலையகத்தில் புலிகளுக்கு பெரும் தளம் இருக்கும் என்றால் அவர் எப்படி, எந்த முகத்தோடு புலிகளுடன் பேச்சு நடத்த யாழ்ப்பாணம் செல்ல முடியும்?

— தெற்கில் உள்ள சில சிங்கள பேரினவாத அமைப்புகளின் பிரதிநிதிகளும், முஸ்லிம் அமைப்புகளின் பிரதிநிதிகளும் இப்படிக் கேட்பதாக பி. பி. ஸி. நேற்றிரவு குறிப்பிட்டது. [உ-3]

## நாடாளுமன்றத் தெரிவுக்குழு மீண்டும் 21 ஆம் திகதி கூடும்

கொழும்பு, ஜன. 12

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முதலாவது கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

குழுவின் தலைவரும் சுதந்திரக் கட்சி எம். பியுமான

[4 ஆம் பக்கம் பார்க்க]

# சின்னஞ்சிறு விளம்பரம்

### நாற்றுக்கள் விற்பனைக்கு

விளாத்தியில், நாரத்தையில் ஒட்டிய நல்ல இன தோடங்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. சைவ வித்தியாவிருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/1276)

### மணமகன் தேவை

உதவி வைத்திய அதிகாரி அச்சுவினி நட்சத்திரம், உதயச் செவ்வாய், வயது 27 உள்ள ஜாதகருக்கு மணமகன் தேவை. 341, C/o. உதயன் யாழ்ப்பாணம். [19297]

### சிறுவர் பாடசாலை

பரி. பேதுரு சிறுவர் பாடசாலை ஆரம்பம்: 6-1-1992 விண்ணப்பப் படிவங்களை நிம்மர் மண்டபம், வேம்படி வீதியிலும், கில்னர்மண்டபம், வண்ணார் பண்ணையிலும் பெற்றுக்கொள்ளலாம். [சி/1323]

### ஆசிரியர் பயிற்சி

பரி. பேதுரு சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி ஆரம்பம்: 15-1-1992 ஒரு வருட பயிற்சி. O/L பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப்படிவங்கள் கில்னர் மண்டபம், வண்ணார் பண்ணையில் பெற்றுக்கொள்ளலாம். [சி/1322]

## FRENCH

ஆரம்ப பிரெஞ்சு மொழி சொல்லிக் கொடுக்கப்படும்.
இடம்:
வேதாரணியர் 8 ளவு.
உடுவில் A. C. A.
அலுவலகம் முன்.
[4498]

## C. C. A.

வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## A/L 1991
## வினா-விடை வகுப்பு

பொருளியல்
-உதயன்

பிரிவு - I
செவ்வாய்:
இலங்கை பொருளாதாரம்
வியாழன்:
சென்மதி நிலுவை
காலை 8-00 மணி

பிரிவு - II
செவ்வாய்;
சந்தைச் சமநிலை
வியாழன்:
வரவு-செலவுத் திட்டம்
பி.ப. 1-00 மணி
(சி-1282)

### O/L கணிதம்

92, 93 ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைகளில் உயர்ந்த பெறுபேறுகளை அடைவதற்குக் கணிதம் கற்பிக்கப்படும். ஆசிரியர், B. Sc. 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (4500)

### சமூகக்கல்வி

விற்பனையாகின்றது! சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். சமூகக் கல்வி ஆண்டு 11 (புதிய பாடத்திட்டம்) ஆக்கியோன்: ந. தர்மபாலன் (சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்) [19243]

### விடுகதைத் தொகுப்பு

''நொடியும் - விடையும்'' விடுகதைத் தொகுப்பின் மூன்று பாகங்களும் இப்பொழுது விற்பனையாகின்றன. எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். ரூபா ஆயிரம். பரிசுப் போட்டியும் உண்டு. ஆசிரியர் கோப்பாய் சிவம். [19288]

### சோதிட நூல்கள்

புத்தாண்டுப் பலன்கள் செவ்வாய் மாற்றம், கருணைக்கடல் பாபா, நடமாடும் மனித தெய்வம் ஸ்ரீ சத்ய சாயிபாபா, முற்பிறவி அற்புத வரலாறுகள், கிடைக்குமிடம்: ரகுநாதன் பதிப்பகம், யாழ்ப்பாணம். தயாளன், விவசாய மருந்தகம் கோண்டாவில் கிழக்கு. நூல்களின் ஆசிரியர் Prof. சத்தியதாஸன், சித்தன்கேணி. 19307

### வெளிவந்து விட்டது

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை, கணக்கியல் உ. த. [9 வருடம்] வினா விடை வெளிவந்து விட்டன. பெற்றுக் கொள்ளும் இடங்கள்: அறிவகம் புத்தகசாலை, மணிக்கூட்டு வீதி, சுப்பிரமணியம் புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி/1285]

### அப்பியாசக் கொப்பிகள்

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள், குறைந்த விலையில் விற்பனையாகின்றன. அறிவகம், 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [வெலிங்டன் சந்திக்கு அருகாமை] [சி/1284]

## BITSMANS
## கல்வி நிறுவனம்.

மானிப்பாய்.

*O/L - 92*
*Day Classes*

வழமையான
ஆசிரியர் குழுவினால்

ஆரம்பம்:
**14 - 01 - 1992**
மு. ப. 8-00 மணி
[சி-1272]

# மருந்து விநியோகம்

தனியார் வைத்தியசாலைகள், எம். பி. பி. எஸ்., ஆர். எம். பீ. வைத்தியர்களுக்கும் செவ்வாய்க்கிழமை (14-01-1992) இலிருந்து விநியோகிக்கப்படும்.

விலைப்பட்டியல் யாழ். அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிரதி எமது ஸ்தாபனத்தில் பார்வையிடலாம்.

நிர்வாகம்,
சிற்றி மெடிக்கல்ஸ்.

[5001]

# முக்கிய அறிவித்தல்

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையின் போது பூநகரி ஆலடி சந்தியில் தரித்து நின்று எடுக்கமுடியாமல் உள்ள பொதி சுமக்கும் வாகனங்களின் (லொறிகளின்) உரிமையாளர்கள் தங்களுடைய வாகனம் என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்களை வட பிராந்திய பொதி சுமக்கும் வாகன சங்கக் காரியாலயத்தில் 20-01-1992 ஆம் திகதிக்கு முன்பதாக சமர்ப்பிக்கும்படி வேண்டுகிறோம்.

வட. பி. பொதி சுமக்கும் வாகன சங்கம்.

[19306]

# விளையாட்டுப் போட்டி

## ஆனைக்கோட்டை மஹாஜன சனசமூக நிலையம்

**18-1-1992 சனிக்கிழமை.**

(1) **40 மைல் சைக்கிள் ஓட்டம்**
(தமிழீழ எல்லை — **Open Race**)
ஆரம்பம்: காலை 6-00 மணி
சேர்வு கட்டணம்: ரூபா 50/-

(2) **19-1-1992 ஞாயிற்றுக்கிழமை**
10 மைல் சைக்கிள் ஓட்டம் (பெண்கள்)
(தமிழீழ எல்லை — **Open Race**)
ஆரம்பம்: காலை 6-00 மணி
சேர்வு கட்டணம்: ரூபா 50/-

(3) **மற்றும் பலதரப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் ஆனைக்கோட்டை மஹாஜன சனசமூக நிலைய எல்லைக்குட்பட்ட வீரர்களுக்கு மட்டும் நடைபெறும்.**

பங்குபற்றும் போட்டியாளர்கள் மேற்படி நிலையத்தில் 16-1-1992 க்கு முன் பதிவு செய்து கொள்ளவும்.

- நிர்வாகிகள்.

[19298]

## விண்ணகம் விரைந்த
## 2 ஆம் வருட நிகழ்வாக

12 — 01 — 1992



''அருட் செல்வி''
## அன்னமேரி - நவத்திரேஸ்
தி. கு. க.

மண்ணின் வித்தாய்: **03 - 10 - 1952**
விண்ணின் சொத்தாய்: **12 - 01 - 1990**

''இறந்தொழியேன்! உயிர் வாழ்வேன்!!
ஆண்டவருடைய அரும் செயல்களைப்
பறைசாற்றுவேன்!!!'' (சங். 117:17)

அன்பு நிறை நவத்திரேசே!
ஆண்டவனோடிணைந்து நீருய —
இரண்டாண்டாய் வாழ்ந்து விட்டீர்
ஈதெமது ''விசுவாசம்''!
உந்தனது ''சேவை வாழ்வை''
ஊரெல்லாம் போற்றுகின்றார்...
எங்களுக்காய் வாழாது நீர் —
ஏற்றமுடன் ''திருச்சபைக்காய்''
ஐயமின்றிப் பாடுபட்டீர்!
ஒன்றித்த ''சபையிலும்'' நீர் —
ஓங்கு புகழ் படைத்தீர் உண்மை!
ஔடதமாய் வாழ்ந்ததினால்...,

ஆண்டவனும் உம்மை ஏற்றார்......!
எங்களுக்காய் பரிந்துரைப்பீர்
''இடப் பக்க'' இயேசுவிடம்!

இழப்பிலும் விசுவாசம் இழக்காத...
பெற்றோர், சோதரர்,
உறவினர்கள், நண்பர்கள்.

''றேமன்ட் வில்லா''
சில்லாலை,
பண்டத்தரிப்பு. [19274]

# விமான விபத்து தவிர்க்கப்பட்டது

பம்பாயில் சாந்தா குரூஸ் விமான நிலையத்தின் ஓடுபாதையில் இரண்டு விமானங்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்வதிலிருந்து மயிரிழையில் தப்பியதாக அறிவிக்கப்படுகிறது.

இரண்டு விமானங்களின் பைலட்டுகளும் உரிய நேரத்தில் செயல்பட்டு, பெரும் விபத்து ஒன்று நேராமல் தடுத்தனர். இதன் காரணமாக அதிலிருந்த 529 பயணிகளும் தெய்வாதீனமாக உயிர் தப்பியதாகவும் அறிவிக்கப்படுகிறது. (த)

# முக்கிய அறிவித்தல்

அசல் ஆர். வி. ஜி பீடிகளைப் போல் ஒரு சில பேர்கள் **தரத்திலும் விலையிலும் குறைந்த போலி** ஆர். வி. ஜி பீடிகளை விற்பனை செய்வதாக எமக்கு அறியவந்துள்ளது. அசல் ஆர். வி. ஜி பீடியின் விலையில் மாற்றம் எதுவும் இல்லை.

**குறைந்த** விலையில் போலி ஆர். வி. ஜி பீடி விற்பனை செய்பவர்களை இனம் கண்டு எமக்குத் தகவல் தருமாறு பீடி விற்பனையாளர்களை அன்புடன் வேண்டுகிறோம். இது தொடர்பாக தகவல் தருபவர்களுக்கு **தகுந்த சன்மானம்** அளிக்கப்படும்.

**ஆர். வி.ஜி நிர்வாகம்.**
58, குறுக்கு வீதி.
நல்லூர், யாழ்ப்பாணம்.

(19273)

# கணக்கு லிகிதர் தேவை

| | |
|---|---|
| தகைமை: | ஜி. சீ. ஈ. உயர்தரம் சித்தியுடன் கணக்கு பதிவதில் அறிவு. |
| வயது: | 25 முதல் 45 வருடங்கள். |
| அனுபவம்: | ஐந்து வருடங்களுக்குக் குறையாமல். |
| வேதனம்: | 1250/- — 1850 / 20 X 30 உடன் அலவன்ஸும். |

இறுதிக் கணக்குகள் மற்றும் ஐந்தொகை தயாரிப்பதுடன் ஆங்கில தட்டச்சு வேலைகள், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்களுடன் 20 - 01 - 1992ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

அதிபர்,
நவீல்ட் செவிப்புலன், விழிப்புலன் -
இழந்தோர் பாடசாலை,
கைதடி.

[சி-1309]

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## வயிரமுத்து செல்வராஜா
(யோவான்)

மண்நாடலங்கரித்த நாள்: **24 — 09 — 1953**
திருநாடலங்கரித்த நாள்: **12 — 01 — 1990**

ஆண்டு இரண்டு கழிந்ததையா
ஆண்டவன் பாதம் நீர் சென்று!
ஆயிரம் ஆண்டுகள் கழிந்தாலும்
ஆறிடுமோ உம் நினைவு!
உள்ளம் அழுகுதையா - உம் நினைவு
உள்ளத்தை வாட்டுதையா!
உலக நாயகர் இயேசுவின் கிருபையோ - எம்
உள்ளத்தைத் தேற்றுதையா!

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், அப்பா, அம்மா,
மாமா, மாமி, மச்சான்மார், மச்சாள்மார்,
அக்காமார், அண்ணன், தம்பிமார்,
உற்றார், உறவினர்கள்.

பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு.

[19310]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### யார் புத்திசாலிகள்?

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே முடிவானது. ஆனால் வடக்கு - கிழக்கில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக இராணுவ நடவடிக்கைகள் தொடரும்!

இவ்வாறு குழப்பம் கலந்து கருத்துத் தெரிவித்திருக்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியை பாதுகாப்புப் படையினர் எதிர்க்கவில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார். ஆனால் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் நுழைவதற்கு இராணுவம் தயார் நிலையில் இருக்கிறது. மிக விரைவில் அவர்கள் குடாநாட்டிற்குள் பிரவேசிப்பர் என்றும் ஜெனரல் ரணதுங்க தெரிவித்திருக்கிறார்.

இனப்பிரச்சினையும், வடக்கு - கிழக்கில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும்செயற்பாடும் வெவ்வேறானவை; ஒன்றுக்கு மற்றது தொடர்பில்லாதவை என்ற தொனியிலேயே அவரது கூற்று அமைந்திருக்கிறது.

இனப் பிரச்சினையை அரசியல் தீர்வு மூலமும், யுத்தத்தை இராணுவத் தீர்வு மூலமும் முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்று அரசாங்கமும் அதன் அதிகாரிகளும் கருதுகிறார்கள். அந்தக் கருத்து வழி நடந்தே செயற்படவும் செய்கிறார்கள்.

அரசியல் தீர்வை நோக்கியும், இராணுவத் தீர்வை நோக்கியும் சமாந்தரமாக நடக்கலாம். அதன் மூலம் நாட்டின் பெரும் நோயைக் குணமாக்கலாம் என்ற சிந்தாந்தத்தை அவர்கள் வகுத்திருப்பதாகத் தெரிகிறது.

வடக்கு - கிழக்கில் யுத்தம் நடப்பதற்கும் சரி, சட்டம் ஒழுங்கு சீராகச் செயற்படாமல் மண்டிக் கிடப்பதற்கும் சரி, இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்படுவதே மூலகாரணம் என்பதை அவர்கள் உணரத் தவறிவிட்டார்கள்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்பட்டுவிட்டால், சட்டம் - ஒழுங்கு என்பன தாமாகவே சீராகி விடும்; நிமிர்ந்து விடும். ஆகையால் அரசியல் தீர்வுக்கு முன்னுரிமை கொடுத்து நாட்டில் ஏற்படும் அழிவுகளைத் தடுக்க வேண்டும் என்ற சிந்தனை ஆட்சிக் கட்டிலில் உள்ளோருக்கு இன்னும் பிறக்கவில்லை.

அரசியல் தீர்வு என்ற தடத்திலும், இராணுவத் தீர்வு என்ற தடத்திலும் சமாந்தரமாக ஓடும்போது இராணுவத் தீர்வே முன்னிடம் பிடித்து முதலிடம் பெறும் என்பதை அரசியலாளர் அறியாதிருப்பது பெரும் முட்டாள்தனமானதாகும்.

சமாந்தரப் போட்டியில் இராணுவத் தீர்வு முதலிடம் பெற்று — இராணுவம் அரசைவிட மேலோங்கி — அரசியலாளரை பின்னுக்கு உதைத்துவிடும் என்பதை இராணுவ அதிகாரிகள் நன்கு அறிவார்கள். அவர்கள் புத்திசாலிகள்!

அதனால் அரசியல் தீர்வையும், இராணுவத் தீர்வையும் ஒரே சமயத்தில் மேற்கொள்ளும் அரசின் முடிவை அவர்கள் விரும்பி ஆதரிக்கவே செய்வர்,

இதன் ஆபத்தை உணர்ந்து, இராணுவத் தீர்வு வழி செல்வதை நிறுத்தி, அரசியல் தீர்வு வழிக்கு அரசு திரும்பி அதனைச் செயலில் காட்ட வேண்டும். இல்லையேல் இனப்பிரச்சினை தீராது, நாடும் இராணுவ ஆட்சி நோக்கியே நடை போடும்.

## நோயாளருடன் கப்பல் 14ஆம் திகதி புறப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 12

கொழும்பில் சிகிச்சை பெற வேண்டிய அவசர நோயாளிகளை கப்பல் மூலம் அழைத்துச் செல்லும் பணி சுமார் இரண்டு மாத கால இடைவெளியின் பின் மீண்டும் ஆரம்பமாகிறது.

எதிர் வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அவசர நோயாளர்களுடன் 'குமண' கப்பல் பருத்தித்துறைத் துறைமுகத்திலிருந்து திருகோணமலைக்குப் புறப்படுகிறது.

இதேபோன்று கொழும்பில் சிகிச்சை பெற்ற நோயாளர்களையும் இங்கு அழைத்து வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-3-15]

## பணியாளருக்கு கௌரவம்

சிறந்த சேவையாற்றிய பணியாளர்களையும் தொடர்ந்து 25 ஆண்டுகளுக்கு மேல் கூட்டுறவுச் சேவை செய்த பணியாளர்களையும் கௌரவிக்கு முகமாக ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம் இன்று ஞாயிறு பிற்பகல் 2-00 மணிக்கு சங்கத் தலைமைக் கரியாலயத்தில் வைபவம் ஒன்றை நடத்த உள்ளது.

## அரசாங்க ஊழியர்களே முதலில் திரும்புகின்றனர்

சென்னை, ஜன. 12

தமிழகத்திலிருந்து திருப்பியனுப்பி வைக்கப்படவுள்ள முதலாவது தொகுதி ஈழத் தமிழ் அகதிகள் அனைவரும் அரசாங்க ஊழியர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாடு மறுவாழ்வுத்துறை சிறப்பு ஆணையாளர். திரு. சி. எம். இராம்தாஸ் இத்தகவலைத் தெரிவித்தார்.

முதலாவது அணியில் 750 அகதிகள் தாயகம் திரும்பவிருக்கின்றனர் என்பது தெரிந்ததே. (உ-எ)

## ப. நோ. கூ. ச கிளைகள் இன்று திறந்திருக்கும்

யாழ்ப்பாணம், ஜன. 12

தைப்பொங்கலையொட்டி மக்கள் பொருள்களை கொள்வனவு செய்ய வசதியாக யாழ். ப. நோ. கூ. சங்கக் கிளைகள் இன்று ஞாயிற்றுக்கிழமையான போதிலும் திறந்திருக்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

பெங்கலுக்குத் தேவையான பொருள்களை மக்கள் வாங்க வசதியாக இன்றும், நாளையும், நாளை மறுதினமும் தினசரி மாலை 6 மணி வரை கிளைகள் திறந்திருக்கும்.

வர்த்தகத் திணைக்களக் கிளைகளும் இன்று திறந்திருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## சோவியத் பிளவுண்டதால் இந்தியாவுக்கு ஆபத்தாம்!

புதுடில்லி, ஜன. 12

சோவியத் யூனியனின் மறைவை அடுத்து அங்கு அணு ஆயுத பலத்துடன் புதிதாகத் தோன்றியிருக்கும் சில முஸ்லிம் நாடுகளுடன் சேர்த்து ஆசிய பிராந்தியத்தில் உள்ள முஸ்லிம் நாடுகளின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்திருக்கிறது.

இந்த நாடுகளினால் உலக அமைதிக்கு, குறிப்பாக இந்தியாவின் ஸ்திரத் தன்மைக்கு அபாயம் ஏற்படலாம் என்று புதுடில்லிக்கு விஜயம் செய்திருக்கும் அமெரிக்க செனட்டர் பேர்க்லர் எச்சரித்திருக்கிறார். [உ-எ]

## மீனவர் உணவு முத்திரைக்கு இன்று முதல் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ். உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட மீனவர்களின் உணவு முத்திரைக்கு இன்று முதல் யாழ். ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் பொருள்கள் விநியோகிக்கப்படும்.

யாழ். மாவட்டத்தில் ஆறாயிரம் மீனவ குடும்பங்களுக்கு உணவு முத்திரைகள் வழங்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

யாழ். உதவி அரச அதிபர் பிரிவில் மட்டும் 3 ஆயிரம் மீனவ குடும்பங்கள் உணவு முத்திரை மூலம் நிவாரணம் பெறவிருக்கின்றன. [உ-3]

## தமிழக பொலீஸ் அதிகாரி தற்காலிக வேலை நீக்கம்

சென்னை, ஜன. 12

தி. மு. க. ஆட்சிக் காலத்தில் புலனாய்வுத்துறைத் தலைவராக இருந்த ஜபார் அலி என்பவர் கடமையில் தவறினார் என்று தெரிவித்து மாநில அரசு அவரை தற்போது தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளது.

முன்னாள் தி. மு. க. அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் கைது செய்யப்பட்டதை அடுத்தே இவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

முன்னாள் உள்துறைச் செயலாளர் நாகராஜன் திருச்சி நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தில் சுப்புலட்சுமி ஜெகதீசனின் பெயரையும் சில ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் மற்றும் சில பொலீஸ் அதிகாரிகள் ஆகியோரின் பெயர்களையும் [illegible] விக்கப்படுகிறது.

## தியாகராஜ சுவாமிகள் இசையாராதனை இன்று

யாழ்ப்பாணம், ஜன. 12

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் இசையாராதனை நிகழ்ச்சிகள் இன்று காலை 8-30 முதல் மாலை வரை நடைபெறவிருக்கின்றன.

காலை 8-30 மணிக்கு ஈழத்தின் பிரபல இசைக்கலைஞர்கள் ஒருங்கிணைந்து பஞ்சரத்ன கீர்த்தனைகளை இசைப்பார்கள்.

காலை நிகழ்ச்சிகளின் போது நாதஸ்வர மேதை எம். பஞ்சாபிகேசனுக்கு இவ்வாண்டுக்கான 'இசைப் பேரறிஞர்' விருது வழங்கப்படும். யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா விருதை வழங்குவார். சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கௌரவிப்புரையை நிகழ்த்துவார்.

பிரபல கலைஞர்கள் பங்குபற்றும் இசைநிகழ்ச்சி மாலையில் இடம்பெறும். (உ-3)

## பஞ்சாபிகேசனுக்கு விருது:

## இசையால் தமிழீழத்தை தலை நிமிரச் செய்தவர்

### கலை, பண்பாட்டு கழகம் வாழ்த்து

"இசைப் பேரறிஞர்" விருது பெறும் நாதஸ்வர மேதை திரு. பஞ்சாபிகேசன் தன் இசை வல்லமையால் தமிழீழத்தை தலைநிமிரச்செய்த பெருந்தகை.

— இவ்வாறு விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் பாராட்டியிருக்கிறது.

"அகில இலங்கை கம்பன் கழகத்தினர் தமிழீழ இசைக் கலைஞர்களுக்கு வருடா வருடம் இசைப் பேரறிஞர் விருது வழங்கி கௌரவிப்பதையிட்டு விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் பெரும் மகிழ்ச்சி அடைகிறது.

இவ்வருடம் இவ்விருதைப் பெறும் நாதஸ்வர மேதை திரு. எம். பஞ்சாபிகேசன் இவ்விருதுக்கு மிகவும் பொருத்தமானவர்; தமிழீழத்தை தன் இசை வல்லமையால் தலை நிமிரச் செய்த பெருந்தகை.

விருது பெறும் கலைஞருக்கும் அதை வழங்கி கௌரவிக்கும் கம்பன் கழகத்துக்கும் எமது வாழ்த்துக்கள்." — இப்படி கலை, பண்பாட்டுக் கழகத்தினால் விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [உ-எ]

## விசர்நாய்க் கடிக்கு வவுனியாவில் தடுப்பூசி!

யாழ்ப்பாணம், ஜன. 12

விசர்நாய்க் கடிக்கு உள்ளானவர்களை வவுனியாவுக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு ஏ. ஆர். வி. தடுப்பூசி ஏற்றுவதற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை ஏற்பாடு செய்துள்ளது.

நாளை திங்கட்கிழமை காலை 6 மணிக்கு அவர்களை அழைத்துச்செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், விசர் நாய்க் கடிக்கு உள்ளாகி தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்கள் யாழ். கண்டி வீதியில் அமைந்துள்ள செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. [இ-5]

## தமிழர்களின் உரிமையை வென்றெடுக்க வேண்டும்

### அமைச்சர் தொண்டமான்

இன்றைய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு தமிழ்மக்களின் உரிமைகள் வென்றெடுக்கப்படுவதுடன் இந்நாட்டின் இறைமையையும் நாம் காப்பாற்ற வேண்டும். இதற்கு சகல இன மக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

வெள்ளி மாலை ஜனாதிபதி செயலகத்தின் முன்னால் நடைபெற்ற சேர். பொன் அருணாசலத்தின் நினைவு தின விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசும் போது அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இவ்வாறு கூறினார். (த)

## இயந்திரக் கோளாறு

## எயர் லங்கா விமானம் சென்னையில் தரையிறக்கம்!

கொழும்பிலிருந்து புறப்பட்ட எயர்லங்கா விமானம் ஒன்று நேற்று முன்தினம் இரவு சென்னை சர்வதேச விமான நிலைய ஓடு பாதையில் அவசர அவசரமாக தரையிறக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அதன் ஒரு இயந்திரம் இயங்காமல் போனதைத் தொடர்ந்தே விமானம் தரையிறக்கப்பட்டது. விமானத்திலிருந்த 115 பயணிகளும் பாதுகாப்பாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும் பயணிகளில் சிலர் நெருக்கடி கால உபயோகத்துக்கான வெளியேற்ற வழி மூலமாக வெளியே வரும் போது அவர்களுக்கு லேசான காயம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (த)

## அகதிகளை...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ணிக்கை மிகைப்படுத்தப்பட்ட ஒன்றாகத் தெரிகிறது.

— இவ்வாறு சென்னையில் [illegible] அகதி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. [உ-5]

## இலங்கைக்கு 25 கோடி கடன்

சென்னை, ஜன. 12

இயந்திர சாதனங்களை வாங்க இந்தியா இலங்கைக்கு 25 கோடி ருபாவை கடனுதவியாக வழங்கும்.

இதே அளவு தொகையை முன்னரும் இந்தியா இலங்கைக்கு வழங்கியிருந்தது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் திரு. ஹரோல்ட் ஹேரத் கடந்த புதன் கிழமையன்று சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தசாக இருகயக்ஞ அழைப்பிதழ்

நிகழும் பிரசோற்பத்தி ஹு மார்கழி மீ 20ஆந் திகதி (4-1-1992) சிவபதமடைந்த எனது அன்பு மனைவி

### திருமதி உஷா பசுபதீஸ்வர சர்மா

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும்.

13-01-1992 திங்கட்கிழமை — தசாகம்
14-01-1992 செவ்வாய்க்கிழமை — மாசிகம்
15-01-1992 புதன்கிழமை — சபிண்டீகரணம்
16-01-1992 வியாழக்கிழமை — கிருகயக்ஞம்

மேற்படி கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

ச. பசுபதீஸ்வரசர்மா
(மலேரியா தடுப்பு வெளிக்கள உத்தியோகத்தர்-மல்லாவி)

பிள்ளையார் கோவில்,
கோப்பாய்.

(தனிப்பட்ட அழைப்புகள் இல்லை.)

[சி, 1327]

---

## சகல வர்த்தகர்களுக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கும் வேண்டுகோள்

எமது பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கடமையாற்றிய சில பழைய வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தரால் சில ஊழல்கள் நடப்பதாக அறிகிறோம். எமது பற்றுச்சீட்டுக்களை அல்லது அதிகார முத்திரை பொறிக்கப்பட்ட ஆதாரமில்லாத கடிதங்களைப் பயன்படுத்தி ஊழல்கள், மோசடிகளில் இப்படியானவர்கள் ஈடுபடலாம். இது குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படி வேண்டுகிறோம்.

**நஷனல் பாதுகாப்புத் திட்டம்,**
181/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[19312]

---

## மரண அறிவித்தல்கள்

### அப்பாக்குட்டி கோணேசன்

அச்சுவேலியை பிறப்பிடமாகவும், தற்போது நாயன்மார் கட்டில் வசித்து வந்தவரும், ஓய்வு பெற்ற யாழ். கச்சேரி உத்தியோகத்தருமாகிய அப்பாக்குட்டி கோணேசன் 11 - 01 - 1992 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், றோகினி, குகபாலன், ஸ்ரீபாலன், வசந்தி, சாந்தினி, ஜெயபாலன், சிவபாலன், உமைபாலன், தரிசினி ஆகியோரின் அருமைத் தந்தையாரும், சற்குணதேவனின் மாமனாரும், கஷ்சன், கிரிதரன் ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியை இன்று (12-01-1992) ஞாயிற்றுக்கிழமை 2 மணியளவில் செம்மணி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
**கோ. சிவபாக்கியம்.**
(மனைவி)

இல. 11, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

[19313]

### துரையப்பாபத்தர் கமலம்மா

யாழ்ப்பாணம் கன்னாதிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற நா. துரையப்பாபத்தரின் மனைவி கமலம்மா 10-1-92 இல் திருச்சியில் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் பாக்கியலெட்சுமி, வரதலெட்சுமி, கோபாலசாமி [கோபால் ஜுவலர்ஸ்] ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற துளசிப பத்தர் மற்றும் மெ. சிவசுப்பிரமணியம் [பாரத் ஸ்ரூடியோ], சி. சண்முகானந்தம், பொன்னம்மா [மீனா] ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான இராசமணி, ஞானம்மாள், கிருஷ்ணசாமி மற்றும் மகாலெட்சுமி, பஞ்சரெத்தினகோபால், வேணுகோபால், இராஜகோபால், ஜெயலெட்சுமி ஆகியோரின் சிறிய தாயாரும், காலஞ்சென்றவர்களான கோவிந்தசாமி, செல்லையாப்பத்தர், இராசமாணிக்கப்பத்தர், சாம்பசிவம் மற்றும் பார்வதி, இராஜம், கனகவல்லி, மகேஸ்வரி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-1-92 இல் திருச்சியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**து. கோபாலசாமி (மகன்)**

கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

[19309]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12 - 1 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## அரசியல் தீர்வே இறுதியாம்!

கொழும்பு, ஜன. 12

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு அரசியல்தீர்வே இறுதியானது. ஆனால் அப்பகுதிகளில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்காக இராணுவ நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில்ரணதுங்க வியாழன் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

## நாடாளுமன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

திரு. மங்கள முனசிங்கா கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

திரு. தொண்டமான் சமர்ப்பித்திருக்கும் யோசனைகள் உட்பட நூற்றுக்கணக்கான யோசனைகள் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக திரு. மங்கள முனசிங்கா கூறினார்.

இக்குழுவின் அடுத்த கூட்டம் இம்மாதம் 21 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ)

## தொண்டா..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கம்பஹாவில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் மடிகே பஞ்ஞாசீக தேரர், பெல்லன்வில விமலரத்ன தேரர் உட்பட பிரபல்யமான பல பௌத்த மதத் தலைவர்களும் அரசியல் பிரமுகர்களும உரையாற்றவிருக்கின்றனர்.

சிங்களப் பேரினவாத இயக்கத்தை முழு மூச்சுடன் செயற்படுத்துவதற்காக இயக்கத்துக்கு உறுப்பினர்களை சேர்க்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இயக்கத்தில் சேருமாறு விண்ணப்பங்கள் கோரி தென்னிலங்கைப் பத்திரிகைகளில் பெரிய விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. [உ-10]

## அனுரா..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

பாக கைது செய்யப்பட்டு போகம்பர சிறையில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் கொலை சந்தேக நபர்களை பார்வையிட அனுரா சென்றமை பிழையானது என கட்சியின் சிரேஷ்ட வட்டாரங்கள் கருதுவதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த]

## இன்று .

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

நிதி ஏற்கப்படும்:-

**பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி**

சங்கானை, சண்டிலிப்பாய் உ. அ. அ. பிரிவுகள் — காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை.

**கோப்பாய் மகாவித்தியாலயம்**

உடுவில், கோப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர், தெல்லிப்பளை உ. அ. அ. பிரிவுகள் — முற்பகல் 10.30 முதல் 11.30 வரை.

**நெல்லியடி மில்லர் ம. மகா வித்தியாலயம்**

கரவெட்டி, பருத்தித்துறை உ. அ. அ. பிரிவுகள் — பிற்பகல் 1.00 மணி முதல் 2.00 மணி வரை.

**கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்**

கொடிகாமம் வட்டவைப் பிரதேசம், பச்சிலைப்பள்ளி உ. அ. அ. பிரிவு — பிற்பகல் 3.00 மணி முதல் 3.30 மணி வரை.

**மட்டுவில் சரஸ்வதி மகாவித்தியாலயம்**

சாவகச்சேரி, கைதடி வட்டவைப் பிரதேசங்கள் — பிற்பகல் 4.00 மணி முதல் 4.30 மணி வரை. [இ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வோதயத்தை காப்பாற்ற ஜனாதிபதியிடம் கோரிக்கை

சர்வோதய இயக்கத்தை அழிவிலிருந்து காப்பாற்றுமாறு ஜனாதிபதி பிரேமதாஸாவிற்குக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

சர்வோதய இயக்கத்தில் பணிபுரியும் ஊழியர்கள் சார்பில் திரு. பிரேமரத்னா விஜேதுங்கா ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் இக்கோரிக்கையை விடுத்திருக்கிறார்.

## பொன்னாலையில் தாக்கு

யாழ்ப்பாணம், ஜன. 12

காரைநகர் வலந்தலை இராணுவ முகாமில் இருந்து நேற்று அதிகாலை 1.30 மணிக்கு பொன்னாலைப் பகுதியை நோக்கி தொடர்ச்சியான கலிபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

## திருமலையில் அத்துமீறல்

திருகோணமலை மாவட்டம் பாலையூற்று, கல்லடிப்பற்று ஆகிய தமிழ்க் கிராமங்களை படையினர் அடிக்கடி சுற்றிவளைத்து, துப்பாக்கிப் பிரயோகம் செய்து அங்கிருந்த தமிழர்களை காட்டுக்குள் விரட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூதூர், கட்டைபறிச்சான், சீனவெளி பகுதிகளிலும், படையினர் அடிக்கடி சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்துவதாகவும், அங்குள்ள தமிழர்களைத் தாக்கி வருவதாகவும் கூறப்படுகிறது. [உ-3]

## பாலர் கலைவிழா

அராலி சரஸ்வதி பாலர் பாடசாலையின் பாலர் கலைவிழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் திரு. க. குமாரசாமி தலைமையில் நடைபெறவிருக்கிறது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சொர்ணம்மா குருசாமி

திருமதி சொர்ணம்மா குருசாமி [இளைப்பாறிய ஆசிரியை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி] 11-1-92 அன்று காலமாகிவிட்டார். இவர் S. R. குருசாமி [ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் சாவகச்சேரி - இந்துக் கல்லூரி] அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி பொன்னையா இராசாவின் மூத்த புதல்வியும், சோமசுந்தரம், ஜெயரத்தினம், துரைரத்தினம், மாதர்க்கரசி, விக்கினேஸ்வரி, கணேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகம்மா, நகுலேஸ்வரி, தில்லைநாதன், பாலசுந்தரம், சிவானந்தன், S. R. சின்னத்துரை, S. செல்லப்பா, திரவியம் கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும் றமணி[உமா]யின் அன்புத் தாயாரும் குகதாசன் அவர்களின் அன்பு மாமியும், தாரணி, பிரசன்னா, சுரேஷ்பாபு, நிசாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை 12-1-92 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3 மணிக்கு குச்சப்பிட்டி மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை, உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**S. R. குருசாமி**

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

[19318]

### ச. தனஞ்செயராசா

நயினாதீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சண்முகநாதன் தனஞ்செயராசா [முன்னாள் முகாமையாளர், எல். பி. ரி. நிறுவனம், கொழும்பு] கியூபாவில் கடந்த 10 ஆம் திகதி காலமானார்.

இவர் சண்முகநாதன் — சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் ஜெயந்தியின் [மாம்பழம்] அன்புக் கணவரும் தவப்பிரியாவின் அருமைத் தந்தையும், சுப்பிரமணியம் - பரமேஸ்வரி தம்பதிகளின் அருமை மருமகனும் சிவரூபவதி, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா, பத்மலோசனி, குருணாவதி, நாகாம்பிகை, கோகுலராஜா, சிவராசா ஆகியோரின் சகோதரரும் தருமராசா, தில்லைநாதன், சபாநாதன், சிவராசா, கிருஷாம்பாள், ஸ்ரீதரன் [உரிமையாளர், யாழ் ஸ்ரீ வாலாம்பிகை றேடர்ஸ்], நகுலேஸ்வரன், பிரபாகரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சு. நகுலேஸ்வரன்**

3, சீனிவாசகம் வீதி,
கொட்டடி.

[19319]